2
0
2
2

# செயலாற்றுகை அறிக்கை

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

**2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

நிறுவனத்தின் பெயர்: **அபிவிருத்தி நிதித் திணைக்களம்**

செலவினத் தலைப்பு: **243**

**உள்ளடக்கம்**

**அத்தியாயங்கள்**


1. நிறுவனத்தின் விபரம் /நிறைவேற்றுப் பொழிப்பு
2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்
3. வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை
4. செயலாற்றுகை சுட்டிகள்
5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைதல் தொடர்பிலான செயலாற்றுகை
6. மனித வள விபரம்
7. இணக்க அறிக்கை

## அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம்:

சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நுண் நிதித் துறையை புத்துயிர் பெறச் செய்தல் ஆகிய குறிக்கோள்களுடன் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி அபிவிருத்தி நிதித் திணைக்களமானது தாபிக்கப்பட்டது. 17 பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட 49 உறுப்பினர்களை இத் திணைக்களத்தின் ஊழியர் குழாம் உள்ளடக்கியுள்ளது. இத் திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளை பின்வருமாறு நான்கு பிரிவுகளின் கீழ் காட்டலாம்.

#### 1.1.1 முதன்மைத் துறை அபிவிருத்தி

அரசின் அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், முதன்மைத் துறைப் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வளர்ந்துவரும் துறைகளுக்கு பொருத்தமான கொள்கைகளை தயாரித்தல் ஆகிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்.

#### 1.1.2 நுண்நிதித்துறை அபிவிருத்தி

வறுமையொழிப்புக்காக உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருவியொன்றான நுண்நிதிக் கடன்கள், பல தசாப்தங்களாக இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் பரந்துபட்ட புவியியல் பிரதேசத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், கிராமிய மட்டத்திலே இதன் நடைமுறைப்படுத்தலில் வணிக வங்கிகளினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டதாகவே காணப்பட்டன. நுண்நிதிக்கடன்கள், நடுத்தர வருமானம் பெறும் குடும்பத்தினரது வருமானம் மற்றும் சொத்துக்களை அதிகரிக்கவும், மிகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினரது நுகர்வுச் செலவை அதிகரிக்கவும், குறைந்த வருமானம் குடும்பங்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும், ஏறக்குறைய அனைத்து வருமானக் குழுக்களிடையேயும் நுகர்வை இலகுபடுத்துவதற்கும் உதவியதோடு பெண்களின் சமூக, அந்தஸ்தினை அதிகரிப்பதற்கும் மற்றும் பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதற்கும் அவை பேருதவி புரிகின்றன.

#### 1.1.3 சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்தி

இலங்கை அரசின் ஒட்டுமொத்த கொள்கை நோக்கில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறை, பிரதான மூலோபாயத் துறையொன்றாக இனங்காணப்பட்டுள்ளதோடு, இத்துறை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, பிரதேச அபிவிருத்தி, வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம், மற்றும் வறுமையொழிப்பு போன்ற மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு உந்துதலாக காணப்படுகின்றது. சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளானவை, இலங்கையின் மொத்த தொழில்முயற்சிகளில் 75% இற்கும் அதிகமான பங்கினையும், வேலைவாய்ப்பில் 45% இற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% இற்கும் பங்களிப்புச் செலுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தில் அவற்றின் முக்கியத்துவம் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

#### 1.1.4 அபிவிருத்தி நிதி பற்றிய உபாயத் திட்டமிடல்

அதிகப்படியான பயிர் அறுவடைகளை முகாமை செய்தல் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான பண்ணை விலையை உறுதி செய்யும் அதே

வேளையில் சிறிய மற்றும் நடுத்தரளவு விவசாயிகள் மற்றும் பிற சந்தை காரணிகளை கருத்திற்கொண்டு வழங்கல் மற்றும் கேள்விப் பக்க ஏற்றத்தாழ்வுகளை சமநிலைப்படுத்துவதனூடாக சந்தை விலையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காகவும், பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யக்கூடிய புதிய தொழில்முனைவோரை அங்கீகரிப்பதற்காகவும் இத் திணைக்களத்தின் தலையீட்டுடன் சலுகைக் கடன்கள், திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு போன்ற பல்வேறு அரச சலுகைகள் வழங்கப்படுகின்றன.

## 1.2 நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

**நோக்கு :**
"அபிவிருத்தி நிதிக்குத் தேவையான வசதிகளை வழங்கும் பிரதான அரச முகவராதல்"

**பணிக்கூற்று :**
"பொருத்தமான கொள்கைகள் மற்றும் உத்திகளை வடிவமைத்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகளின் வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், தொடர்புடைய பங்குதாரர்களுடன் தேவையான தலையீட்டின் மூலம் முதன்மைத் துறைகளுக்கு நிதியளித்தல்"

**குறிக்கோள் :**
"சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி மற்றும் நுண்கடன் துறைக்கு புத்துயிர் அளித்தல்."

## 1.3 பிரதான தொழிற்பாடுகள்

1.3.1 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

1.3.2 சந்தைத் தரவுகளை மீளாய்வு செய்து நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றின் வளர்ச்சிக்கு அவசியமான வினைத்திறனான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

1.3.3 பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கும், அரசினால் அமுல்படுத்தப்படும் மானியத் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கான வசதிகளை வழங்குதல்.

1.3.4 சந்தையின் கேள்விக்கேற்ப வங்கியியல், காப்புறுதி, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரிவு மற்றும் நிதித் துறைக்கான சட்ட உருவாக்கத்திற்கு தேவையான வசதிகளை உருவாக்குதல்.

1.3.5 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, வங்கித் துறை, நிதிச் சந்தை மற்றும் ஏனைய துறைகள் தொடர்பான அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறைக்கு வசதியளித்தல்.


1.3.6 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, முதன்மை துறை மற்றும் ஏனைய துறைகளுடன் தொடர்புடைய வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வெளிநாட்டு கடன் உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

1.3.7 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகள் தொடர்பான விவசாயம், தொழில்நுட்ப, மற்றும் சேவை பிரிவுகளில் சகல தரவுகளைத் தொகுத்தலும், அவற்றை ஆய்வு செய்து காணப்படும் தடைகளைக் கண்டறிந்து கொள்கையளவில் தலையிட்டுத் தீர்த்து வைத்தல்.

1.3.8 அரசாங்க அனுசரணையின் கீழ் அமுல்படுத்தப்படும் நிதி உதவித் திட்டங்களை மேற்பார்வை செய்தல்.

1.3.9 அரச கொள்கைகளுக்கிணங்க நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிதித் துறைகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கிகளின் நிதி வசதிகளை ஏற்படுத்தல்.

## 1.4 நிறுவன வரைபடம்



**1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

1. முதன்மைத் துறை அபிவிருத்தி
2. நுண்நிதித்துறை அபிவிருத்தி
3. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை அபிவிருத்தி
4. அபிவிருத்தி நிதி பற்றிய உபாயத் திட்டமிடல்

**1.6 அமைச்சு/ திணைக்களம் பிரதேச செயலகங்களின் கீழுள்ள நிதியங்கள்**

பொருந்தாது.

**1.7 வெளிநாட்டு நிதியுதவியின் கீழான கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் (இருப்பின்)**

| கருத்திட்டத்தின் பெயர் | நிதி வழங்கும் நிறுவனம் | கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட செலவு (ரூ. மில்லியன்) | கருத்திட்டத்தின் கால அளவு |
|---|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கடன்வரிசைக் கருத்திட்டம் (SMELoC) | ஆசிய அபிவிருத்தி வங்கி | 69,194.29 | 2016-2024 |

## அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

### மேன்நோக்கு

நாடொன்றின், குறிப்பாக இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளின் பிராந்திய மற்றும் உள்ளடக்கிய சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகளின் (MSMEs) அபிவிருத்தி இன்றியமையாததாகும். அவை பொருளாதாரத்திற்கு புதிய திறன்கள் மற்றும் முன்மொழிவுகளை திறம்பட வழங்குவதற்கு பங்களிக்கும் அதேவேளை, சந்தையை மேலும் ஆற்றல்மிக்கதாகக்குகின்றன. இதன் அடிப்படையில், இத்திணைக்களம் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதுடன் தேவையான தலையீட்டினூடாக, தொடர்புடைய பங்குதாரர்களுடன் முதன்மைத் துறைகளுக்கு நிதியளிக்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் உதவி செய்கின்றது.

உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான அணுகல், நிதி உதவிகளுக்கான அணுகல், பணப்புழக்க முகாமை போன்ற பல சவால்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழிமுயற்சித் துறை எதிர்கொண்ட போதும், கொவிட்-19 தொற்றுநோய், மற்றும் பொருளாதார வீழ்ச்சி போன்ற காரணங்களால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டது. சமீபத்திய மின்வெட்டு மற்றும் எரிபொருள் பற்றாக்குறையால் இந் நிலைமை மேலும் மோசமடைந்ததுடன், இதன் விளைவாக ஏற்பட்ட அதிகரித்த தோல்வி, குறைந்த வளர்ச்சி மற்றும் குறைந்த வாழ்நாள் காலம் என்பன சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறைக்கு நிச்சயமற்ற எதிர்காலத்தை உருவாக்கின. கடுமையான நிதி நெருக்கடியின் காரணமாக, வெளிநாட்டு நிதி அல்லது அரச வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதி உதவிகளை வட்டி-மானியக் கடன்கள் வடிவில் அரசாங்கத்தினால் வழங்க முடியாது போனது. எவ்வாறாயினும், பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இந்தத் துறையை நிலைநிறுத்துவதற்கும் அதன் தொடர்ச்சியான செயற்பாட்டினை உறுதி செயும் பொருட்டும் நிதி மற்றும் நிதியல்லா ஆதரவை வழங்குவதற்காக மாற்று நிதி ஆதாரங்களை அடையாளங்காண வேண்டிய தேவை இருந்தது.

### சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசைக் (SMELoC) கருத்திட்டத்தின் முன்னேற்றம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் (SMELoC) கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிக் கடன் வரிசைக் கூறின் தேவைப்பாட்டின் அடிப்படையில், 2022 ஆம் ஆண்டில், 692 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு உரிமம் பெற்ற பதின்மூன்று வணிக வங்கிகளினூடாக முதலீட்டுக் கடனாக மொத்தம் ரூபா 5,700 மில்லியன் வழங்கப்பட்டது. குறிப்பாக, 343 பெண் தொழில்முனைவோருக்கு முதலீட்டுக் கடன்களுடன் இணைத்து ரூபா 251 மில்லியன் தொகை பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான நிதி முன்முயற்சி நன்கொடை (We-Fi) மானியாக வழங்கப்பட்டது. மேலும், 982 சிறு தேயிலைத் தோட்ட உடமையாளர்களுக்கு, தேயிலை புது நடுகை, மீள் நடுகை, நீர்ப்பாசணம், தானிய உள்நிரப்பல், நாற்று அபிவிருத்தி மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றிற்காக ரூபா 1,515 மில்லியன் தொகை வழங்கப்பட்ட அதேவேளை 660 சிறு தேயிலை

உரிமையாளர்களுக்கு தேயிலை புது நடுகை மற்றும் மீள் நடுகை நோக்கங்களுக்காக மாத்திரம் ரூபா 86 மில்லியன் மதிப்பிலான தொகை வறுமைக் குறைப்புக்கான ஜப்பானிய நிதி (JFRP) மானியமாக வழங்கப்பட்டது.

மேலும், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட 3,842 நுண், சிறு மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களின் வணிகத்தை மீள உற்சாகப்படுத்தும் நோக்குடன் ரூபா 19,348 மில்லியன் மதிப்புள்ள தொகை செயற்பாட்டு மூலதனக் கடன்களாக வழங்கப்பட்டன. மேலும், இத் திட்டத்தின் அவசரகால எதிர்வினைக் கூறின் கீழ், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நுண், சிறு மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐ.அ.டொ 13.5 மில்லியன் தொகையை மேலதிக நிதியுதவியாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்தது.

**உரப்பாவனைக் கொள்கை 70:30 ஆக மாற்றமடைந்தமை**

பொருளாதாரத்தில் விவசாயத் துறையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, நெல் மற்றும் பிற பயிர்களுக்கான அரசின் உர மானியக் கொள்கையை ஆதரிப்பதன் மூலம், அத் துறையின் நிலைத்திருப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நெற் பயிர்ச்செய்கைக்கான அரசின் உர மானியக் கொள்கையானது, முந்தைய பருவங்களில் இரசாயன உரத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அறுவடையுடன் ஒப்பிடுகையில், 100 சதவீத சேதன உரப் பயன்பாட்டினால் நெல் விளைச்சலில் ஏற்பட்ட ஏறக்குறைய 37 சதவீத வீழ்ச்சி மற்றும் இரசாயன மற்றும் சேதன உரங்களை ஒன்றாகப் பயன்படுத்துவது தொடர்பிலான விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, 2022/23 பெரும் போகத்தில் ”100 சதவீத சேதன உரக் கொள்கையில்” இருந்து ”70 சதவீத இரசாயன மற்றும் 30 சதவீத சேதன உரக் கொள்கைக்கு” மாற்றப்பட்டது.

அந்நிய செலாவணிப் பற்றாக்குறை காரணமாக, 2021/22 பெரும் போகத்திலும் 2022 சிறு போகத்திலும் போதுமான அளவு இரசாயன உரம் கிடைப்பதை உறுதி செய்ய முடியாது போனது. எவ்வாறாயினும், 2022 சிறு போகத்தில் 65,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்யும் பொருட்டு இந்திய கடன் வரிசை வசதியின் கீழ் ஐ.அ.டொ. 55 மில்லியனை அரசாங்கத்தினால் பெறக்கூடியதாக இருந்த அதேவேளை இதற்கு மேலதிகமாக, 2021/22 பெரும் போகத்தில் கூட்டு உரம், திரவ உரம், உயிரியல் உரம் மற்றும் விசேட உரம் ஆகிய வடிவங்களிலே சேதன உரங்களும் விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில் விநியோகிக்கப்பட்டன. 2022/23 பெரும் போகத்திலிருந்து மாற்றம்பெற்ற ‘‘புதிய 70 - 30 கலப்பின உரக் கொள்கையின்’’ கீழ், நெற் செய்கைக்குத் தேவையான இரசாயன உரத்தின் ஒரு பகுதியினை சமாளிக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் பன்முக முகவர்களின் நிதியுதவியின் கீழ் 105,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தையும் 40,000 மெட்ரிக் தொன் மியூரேட் ஒப் பொட்டாஸ் (MOP) உரத்தையும் இறக்குமதி செய்ய முடிந்தது. விவசாயிகளுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் MOP உரம் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், MOP உரம் வாங்குவதற்காக ஒரு ஹெக்டேருக்கு ரூபா 10,000 என்ற வகையில் ஆகக்கூடியது 2 ஹெக்டேயர் வரை தேவையான தொகை, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்பிலிடப்பட்டது. மேலும், 30 சதவீத சேதன உரத் தேவையை பூர்த்தி

செய்வதற்காக மாவட்ட செயலகங்களின் மேற்பார்வையின் கீழ் 2022/23 பெரும் போகத்தில் நெல் விவசாயிகளுக்கு ரூபா 16,000 மில்லியன் பெறுமதியான சேதன உரங்களை விநியோகிக்கப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கான உரங்கள் மானிய விலையில் வழங்கப்படவில்லை என்பதுடன் அப் பயிர்களுக்கான உரத் தேவையை பூர்த்திசெய்யும் அதிகாரம் தனியார் துறைக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தினைப் பயன்படுத்தி, சிறு தேயிலைச் செய்கையாளர்களுக்கும் சோளச் செய்கையாளர்களுக்கும் முறையே 3,105 மெட்ரிக் தொன் மற்றும் 8,770 மெட்ரிக் தொன் யூரியா உரம், அப் பயிர்களின் அவசர உரத் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 50 கிலோ மூடையொன்று ரூபா 15,000 வீதம், விநியோகிக்கப்பட்டன.

**சேதன உர உற்பத்தியாளர்களுக்கான ஊக்குவிப்புக்கான நிதி உதவி**

”காலநிலை மாற்றத்திற்கான நிலையான தீர்வுகளுடன் பசுமையான சமூக-பொருளாதார முறைமையை நோக்கி” எனும் தலைப்பிலான அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சேதன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் உற்பத்தியாளர்களுக்கான விசேட கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில், ரூபா 162 மில்லியன் பெறுமதியான 25 கடன்கள், தகுதி வாய்ந்த உள்ளூர் சேதன உரம், கிருமி நாசினிகள் மற்றும் கள நாசினித் தயாரிப்பாளர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வங்கிகளினூடாக வழங்கப்பட்டன. இக் கடன்களுக்கான வட்டி மானியம் தற்போது பொதுத் திறைசேரியினால் செலுத்தபட்டுவருகின்றது. மேலும், இக் கடன் திட்டத்திற்கான வட்டி மானியமாக ரூபா 4.5 மில்லியன் தொகை பொது திறைசேரியினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த நெல் உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 5.15 மில்லியன் மெட்ரிக் தொன்களிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 3.39 மில்லியன் மெட்ரிக் தொன்களாக குறைந்த அதேவேளை, தனியார் துறை ஆலைகளினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவும் இதன் விளைவாக குறைந்து காணப்பட்டது.

**இந்திய கடன் வசதியின் (ICL) செயற்படுத்தல்**

உள்நாட்டு வங்கி முறைமை மற்றும் சந்தையில் வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு என்பன காரணமாக உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நாணயக் கடிதங்களை திறப்பதில் பல சிரமங்களை எதிர்கொண்ட இலங்கை இறக்குமதியாளர்களுக்கு வசதியளிக்கும் நோக்குடன் இந்தியாவிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ஐ.அ.டொ. 1,000 மில்லியன் கடனைப் பெறுவதற்காக 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதியன்று இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் இந்திய ஸ்டேட் வங்கிக்கும் (ISB) இடையே கடன் வசதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. காலத்திற்குக் காலம் எழுந்த

தேவைகளின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் பல முறை திருத்தப்பட்டு இறுதியாக பின்வருமாறு சீராக்கப்பட்டது. அத்தியாவசியப் பொருட்கள் (ஐ.அ.டொ. 371 மில்லியன்), மருந்துப் பொருட்கள் (ஐ.அ.டொ. 235 மில்லியன்), கைத்தொழில் மூலப்பொருட்கள் (ஐ.அ.டொ. 194 மில்லியன்) மற்றும் எரிபொருள் (ஐ.அ.டொ. 200 மில்லியன்). வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, சுகாதார அமைச்சு, கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் ஆகியன இந்திய கடன் வரிசை வசதியினை நடைமுறைப்படுத்துவதில் இணைந்து பணியாற்றுகின்றன.

| **வகுதி** | **மொத்த ஒதுக்கீடு (ஐ.அ.டொ மில்) (அ)** | **அனுப்பப்பட்ட பெறுமதி (ஐ.அ.டொ மில்) (ஆ)** | **31.12.2022 வரை இறக்குமதிகளின் பெறுமதி (ஐ.அ.டொ மில்) (இ)** | **வழங்கப்பட்ட பணம் செலுத்தும் அங்கீகாரம் (PA) (ஐ.அ.டொ மில்) (ஈ)** | **இறக்குமதியின் சதவீதம் (%) (இ/ஆ*100)** |
|---|---|---|---|---|---|
| மூலப் பொருட்கள் | 194 | 128 | 26 | 22 | 83.5 |
| மருந்துப் பொருட்கள் | 235 | 184 | 44 | 33 | 75.6 |
| அத்தியாவசிப் பொருட்கள் | 371 | 297 | 75 | 73 | 97.2 |
| எரிபொருள் | 200 | 200 | 200 | 200 | 100 |
| எல்பி எரிவாயு | | 17 | | | |
| **மொத்தம்** | **1,000** | **826** | **345** | **328** | **95** |

மூலம்: இந்திய கடன் வசதி ஒருங்கிணைப்பு பிரிவு

**மலர்மதி கங்காதரன்**

**பணிப்பாளர் நாயகம்**

## அத்தியாயம் 03 – 2022 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

**ஏசீஏ- எப்**

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| பாதீட்டு 2022 | | குறிப்பு | உண்மை நிலை 2022 | உண்மை நிலை திருத்தப்பட்ட 2021 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | **1** | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | **2** | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | **3** | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | **4** | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 20,277,341,570 | 36,391,751,969 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 52,476,765,810 | 91,525 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 3,007,786 | 4,597,091 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | | | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **72,757,115,166** | **36,396,440,585** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ஸ்ரீ (அ),(ஆ)** | | **72,757,115,166** | **36,396,440,585** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **52,476,626,035** | | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ஸ்ரீ (இ)-(ஈ)** | | **20,280,489,131** | **36,396,440,585** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | ஏசீஏ-2(ii) |
| 48,382,665 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | **5** | 48,003,735 | 40,101,482 | ஏசீஏ-2(ii) |
| 13,550,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | **6** | 12,344,889 | 706,860,349 | ஏசீஏ-2(ii) |
| 20,897,671,985 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | **7** | 20,272,915,111 | 35,291,279,934 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | **8** | - | - | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 20,959,604,650 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **20,333,263,734** | **36,038,241,765** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 300,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | **10** | 267,000 | 422,015 | |
| 10,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 2,361,040 | 1,194,064 | |
| 1,109,358,314 | மூலதன மாற்றல்கள் | **12** | 942,626,347 | 988,690,896 | **ஏசீஏ-2(ii)** |
| 13,535,000,000 | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | 11,354,796,347 | 18,000,832,439 | |
| 125,000 | திறன் விருத்தி | **14** | 81,926 | 139,491 | |
| 4,085,221,686 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | **15** | 6,559,086 | 7,377,278 | |
| 18,740,505,000 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **12,306,691,746** | **18,998,656,183** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 36,218,057,375 | 503,282 | **ஏசீஏ-4** |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 2,238,788 | 5,307,115 | **ஏசீஏ-5** |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | 36,220,296,163 | 5,810,397 | |
| | **மொத்த செலவினம் ஐ ஸ்ரீ (ஊஎஏ)** | | 68,860,251,643 | 55,042,708,345 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ ஸ்ரீ (உ-ஐ)** | | (48,579,762,512) | (18,646,267,760) | **ஏசீஏ-7** |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | (48,579,762,512) | (18,646,267,760) | |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | **ஏசீஏ-3** |
| - | | | (48,579,762,512) | (18,646,267,760) | |

## 3.2 நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2022 (ரூபா) | 2021 (ரூபா) |
|---|---|---|---|
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| அதனம், பொறி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,715,350,080 | 1,713,683,520 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5(ஏ) | 6,888,379 | 7,657,377 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | 1,722,238,459 | 1,721,340,897 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (16,252,142,938) | 7,334,520 |
| அதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,715,350,080 | 1,713,683,520 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5(பீ) | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 16,259,031,317 | 322,857 |
| செலுத்தப்படாத கட்டுநிதி மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 1,722,238,459 | 1,721,340,897 |

பக்க இலக்கம் 6 முதல் 27 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குக் கூற்றுக்களின் தகவல்கள் மற்றும் பக்க இலக்கம் 28 முதல் 29 வரை வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியினை உருவாக்குவதற்கான பின்னிணைப்புக்கள். நிதிநிலை அறிக்கைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளை நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றமையும் இந்த நிதிநிலை அறிக்கைகள், கணக்குகளுக்கான குறிப்புகள் மற்றும் பிற தொடர்புடைய கணக்குகளில் உள்ள புள்ளிவிவரங்கள் திறைசேரியின் கணக்குப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டு, இணங்கிக் காணப்பட்டன என்பதை இத்தாள் சான்றளிக்கின்றேன்.

அறிக்கையிடல் நிறுவனத்திலே, நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை உள்ளது என்பதையும், நிதிக் கட்டுப்பாட்டிற்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் செயல்திறனைக் கண்காணிக்க அவ்வப்போது மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றமையும் இதன் பிரகாரம் இவ் முறைமையினை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கோள்ளப்படுகின்றமையையும் நாம் இத்தாள் சான்று பகர்கின்றோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: கே.எம்.எம். சிறிவர்தன
பதவி : திறைசேரியின் செயலாளர்
திகதி : 21/02/2023

K.M.M. Siriwardana
Secretary to the Treasury and
Secretary to the Ministry of Finance,
Economic Stabilization and National Policies
The Secretariat
Colombo 01.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: கீதா விமலவீர
பதவி : பணிப்பாளர் நாயகம்
திகதி : 15.02.2023

Geetha Wimalaweera
Director General
Department of Development Finance
Ministry of Finance
The Secretariat
Colombo – 01.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : டப்.பீ.பீ.எஸ். அபயவர்தன
திகதி : 15.02.2023

W.P.B.S. A[illegible]
De[illegible]
Department of Development Finance
Ministry of Finance
Colombo 01.

**ஏசீஏ- சீ**

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான**

**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை<br>2021<br>ரூபா | திருத்தப்பட்ட<br>2020<br>ரூபா |
|---|---|---|
| **<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 6,440,483 | 2,174,249 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 20,277,341,570 | 36,391,751,969 |
| முற்பணங்களை அறவிடல் | 2,400,749 | 2,477,557 |
| வைப்புக்களின் பெறுகை | 52,476,765,810 | 91,525 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | 72,762,948,612 | 36,396,495,300 |
| | | |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 60,815,750 | 747,554,557 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 20,215,046,597 | 35,216,913,485 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 52,476,626,035 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 2,028,668 | 2,774,199 |
| வைப்புக் கொடுப்பனவு | 348,807 | 503,282 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | 72,754,865,857 | 35,967,745,523 |
| | | |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)ஸ்ரீ(அ)-(ஆ)** | 8,082,755 | 428,749,777 |
| | | |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| | | |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>** | | |

| | | |
|---|---|---|
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 8,082,755 | 428,749,777 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | 8,082,755 | 428,749,777 |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஸ்ரீ(ஈ)-(உ)** | (8,082,755) | (428,749,777) |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)ஸ்ரீ(இ),(ஊ)** | 0 | - |
| <u>**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்**</u> | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| <u>***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:***</u> | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)ஸ்ரீ(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஸ்ரீ(எ) ,(ஒ)** | 0 | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | 0 | - |

## 4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

**அறிக்கையிடலின் அடிப்படை**

**1. அறிக்கையிடப்படும் காலப்பகுதி**

2022 ஜனவரி மாதம் 01ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியானது, இந்நிதிக் கூற்று தொடர்பாக அறிக்கையிடப்படும் காலப்பகுதியாகும்.

**2. அளவீட்டின் அடிப்படைகள்**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்படாதபோது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிற்கு கிட்டிய ரூபாவில் முன் வைக்கப்பட்டுள்ளது.

**3. வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

**4. சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

**5. சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரண கணககுளுடன் தொடர்புபட்டதாகும்.

**6. காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2022 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

### 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

*ரூபா,*000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு (%) |
| பொருத்தமற்றது | | | | | |

### 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா ,000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 20,872,580,000 | 20,959,604,650 | 20,333,263,734 | 97% |
| மூலதனம் | 18,740,505,000 | 18,740,505,000 | 12,306,691,746 | 66% |

### 3.7 .நி.பி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் /திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் /மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா,000

| தொடர் இலக்கம் | அமைச்சு /திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | *உண்மையான செலவிவு* | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | பொருத்தமற்றது | | | | | |

### 3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா, 000

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2021 ஆந் திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | 31.12.2021ஆந் திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடம் மற்றும் கட்டமைப்பு | - | - | - | - |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | - | 33,811,267.31 | - | - |
| 9153 | காணி | - | - | - | - |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | 1,674,538,813 | - | - |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | - | - | - |

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் சிங்கள பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| குறியீட்டுச் சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக *(%)* உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** |
| சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசை (SMELoC) நிகழ்ச்சித் திட்டம் | 98% | - | - |
| பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான நிதியுதவி திட்டம் (We-Fi) | - | - | 73% |
| சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் வரிசை | 94% | - | - |
| வறுமை ஒழிப்புக்கான ஜப்பானிய நிதியத்தின் (JFRP) நன்கொடைக் கூறு | - | - | 54% |
| அவசர கால எதிர்வினைக் கூறு (ERC) | 100% | - | - |

## அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைதல் தொடர்பான செயலாற்றுகை

### 5.1 அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடல்

| இலக்கு / குறிக்கோள் | அடைவுகள் | அடைவுகளின் குறிகாட்டிகள் | இது வரை அடையப் பெற்ற முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | **0% - 49%** | **50% - 74%** | **75% - 100%** |
| **இலக்கு 2,** பசியை இல்லாதொழித்தல், உணவு பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போஷாக்கினை அடைதல், நிலைத்திருக்கும் விவசாயத்தி | 2.4) 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான உணவு உற்பத்தி முறைமைகளை உறுதிப்படுத்தல், சுற்றுச்சூழல் முறைமைகளின் இருப்பினை உறுதிப்படுத்தி சுற்றுச்சூழல் முறைமைகளை பேணுவதனை | 2.4.3) உற்பத்தித் திறன் வாய்ந்த மற்றும் நிலைபேறான விவசாயத்தினை மேற்கொள்ளும் விவசாய நிலங்களின் அளவு | **புதிய முழுமையான பிராந்திய கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 51,558<br>2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகை ரூ. 287.92 மில்லியன்<br><br>**“ரன் அஸ்வென்ன” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 7,970<br>கடன் தொகை: ரூபா 11,469.3 மில்லியன்<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட | | |

| | | | |
|---|---|---|---|
| ன மேம்படுத்தல் | உறுதிப்படுத்தலும் சுற்றுச்சூழல் கட்டமைப்புக்களை நடாத்திச் செல்வதற்கு உரிய காலநிலை மாறுபாட்டின் காரணமாக வரட்சி, வெள்ளம் மற்றும் இயற்கை இடர் மற்றும் மண் வளத்தின் உயரிய தன்மையை மேம்படுத்தி அம்மண் வளத்திற்கு இசைவான விவசாய முயற்சிகளுக்கு மாற்றம் பெறல் | | திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 444.33 மில்லியன்<br><br>**"கொவி நவோதா" கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை: 1,451<br>கடன் தொகை: 682.4<br>2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 55.75 மில்லியன்<br><br>**களஞ்சியசாலைகளின் நிர்மாணம்**<br>பின்னர் உயரிய விலையை பெற்றுக் கொள்ளும் நோக்குடன், அறுவடை காலத்தில் நெல், சோளம், சோயா அவரை, எள்ளு, உழுந்து, மிளகு, வேர்க்கடலை போன்ற விவசாயிகளின் தானிய உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு அனுராதபுரம், புத்தல, மன்னார், கிளிநொச்சி, பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் 05 தானியக் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டன.<br><br>நிலையான விவசாயத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கையாக, மண்ணின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 70% இரசாயன உரத்துடன் 30% சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டது.<br><br>**நெல்லை அசிரியாக மாற்றும் நிகழ்ச்சித் திட்டம்**<br>கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு - நெல் சந்தைப்படுத்தல் சபை மூலமாக 78,355 மெட்ரிக் தொன்.<br><br>விநியோகிக்கப்பட்ட அரிசியின் அளவு - லங்கா சதொச மற்றும் ஏனைய பல்பொருள் அங்காடிகளினூடாக 42,080 மெட்ரிக் தொன்.<br><br>வழங்கப்பட்ட நிதி - அரச வங்கிகளினூடாக ரூபா 6,500 மில்லியன் கடன்கள். |
| **இலக்கு 04** யாவரையும் உள்ளடக்கிய, சமவாய்ப்புள்ள, சமத்துவமான, தரமான | 4.2) 2030ஆம் ஆண்டளவில், சகல பெண் பிள்ளை களுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் தரமான ஆரம்ப குழந்தைப் பருவ | 4.2.1) பெண் ஆண் பால் நிலை அடிப்படையில் சுகாதாரம், கல்வி மற்றும் உளவியல் துறைகளில் சிறந்த அபிவிருத்திப் | **"சிங்கித்தி பாசல" கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை: 62<br>கடன் தொகை: ரூபா. 63.4 மில்லியன்<br><br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| கல்வியை உறுதிப்படுத்துதல், மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல். | வளர்ச்சி, பராமரிப்புச் சேவைகள், மற்றும் முன் ஆரம்பக் கல்விக்கு பிரவேசிப்பதற்கான வாய்ப்பு இருத்தல் மற்றும் அவற்றின் மூலம் அவர்கள் ஆரம்பக் கல்வியை மேற்கொள்வதற்கு தயாராக உள்ளரர்கள் என்பதை உறுதிப்படுத்தல் | பாதையை நோக்கிப் புறப்படுவதற்கு தயாராக உள்ள 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை | திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 2.23 மில்லியன்<br><br>**"ரெக்கவரன" கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை : 9<br>கடன் தொகை : ரூ. 44.4 மில்லியன்<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 3.67 மில்லியன் |
| | 4.7) 2030 ஆம் ஆண்டளவில் கற்போர் அனைவரும் நிலைபேறான அபிவிருத்தியினை பிரசித்தப்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் தகுதியை பெற்றிருத்தல் அவர்கள் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் கல்வி மற்றும் நிலைபேறான வாழ்க்கைமுறை, மனித உரிமைகள், சமாதானம் மற்றும் வன்முறையற்ற கலாசாரத்தை விருத்தி செய்தல், பூகோளக் குடியுரிமை, கலாச்சார வேறுபாடுகளை மதித்தல் நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சாரப் பங்களிப்பு செய்தல் | 4.7.1<br><br>I. உலகளாவிய குடியுரிமைக் கல்வி<br>II. பாலின சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் உட்பட நிலைபேறான வளர்ச்சிக்கான கல்வி கீழ்வரும் அனைத்து மட்டங்களிலும் முக்கியமாக உள்ளது:<br>(அ) தேசிய கல்விக் கொள்கைகள்<br>(ஆ) பாட விதானம்<br>(இ) ஆசிரியர் கல்வி மற்றும்<br>(ஈ) மாணவர்களின் மதிப்பீடு ஆகிய சகல மட்டங்களும் உள்ளடங்கிய கல்விமுறை | **"மை பியூச்சர்" (எனது எதிர்காலம்) கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை : 729<br>கடன் தொகை : ரூபா 650.5 மில்லியன்<br><br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 54.44 மில்லியன்<br><br>**"எரம்பும" கடன் திட்டம் கடன்களின்**<br>கடன் எண்ணிக்கை : 175<br>கடன் தொகை : ரூபா 230.99 மில்லியன்<br><br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 17.17 மில்லியன் |
| **இலக்கு 05 :** பால் நிலை சமத்துவத்தை அடைவதுடன் அனைத்து பெண்களையும், சிறுமிகளையும் வலுப்படுத்தல் | 5.1சகல இடங்களிலும் சகல பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான சகல விதமான பாரபட்சங்களையும் இல்லாது ஒழித்தல் | 5.1.1 பால் நிலை அடிப்படையில் சமத்துவம் மற்றும் பாரபட்சமற்ற நிலைமையை மேம்படுத்தல், வலியுறுத்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான சட்டரீதியான கொள்கைச் சட்டகம் ஒன்று உள்ளதா இல்லையா என்பது தொடர்பாகும். | **பெண்களுக்கான தொழில் முயற்சிகளுக்கான நிதி உதவிக் கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை: 343<br>கடன் தொகை: ரூபா. 251.10 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| **இலக்கு 07** அனைவராலும் தாங்கிக் கொள்ளக் கூடிய நம்பகத் தன்மை கொண்ட நிலைபேறான மற்றும் நவீன சக்தியினை உறுதி செய்தல். | 7.ஆ.)2030ஆம் ஆண்டளவில் விசேடமாக குறை விருத்தியடைந்த நாடுகள் மற்றும் ஏனைய சிறிய தீவுகள், நிலத்தால் முடக்கப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உட்பட அவர்களது வேலைத்திட்டங்களுக்கு ஏற்ப நவீன மற்றும் நிலையான சக்திவாய்ந்த சேவை வழங்குநர்கள் அதிகரித்தல் மற்றும் தொழில்நுட்பத்தை மேலும் விரிவுபடுத்தல் அபிவிருத்தி அடைந்த வரும் ராஜ்யங்களில் ஆதரவளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப, உட்கட்டமைப்பினை விரிவடையச்செய்தல், | 7.ஆ.1 மொத்த உள் நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மின்வலு வினைத்திறனில் முதலீடுகளும், மற்றும் நிலைபேறான அபிவிருத்திச் சேவைகளுக்கான உட்கட்டமைப்பு மற்றும் தொழில் நுட்பத்திற்கான நிதி மாற்றல்களின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் | **“ரிவி பல சவி” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 453<br>கடன் தொகை: 157.6 மில்லியன் ரூபா<br><br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 7.31 மில்லியன் |
| **இலக்கு 08** அனைவருக்கும் எந்நாளும் போசாக்கான நிலையான பொருளாதார அபிவிருத்தி, முழுமையான மற்றும் வினைத்திறனுள்ள தொழில் வாய்ப்பு மற்றும் அனைவருக்கும் கண்ணியமான தொழில் வாய்ப்பு | 8.3. தொழில் முயற்சிகளுக்கு புதிய மற்றும் தொழில் முயற்சியாளர்க்களுக்கான புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு நல்கும் அபிவருத்தியாளர் களுக்கு கொள்கைகளை விருத்தி செய்தல் நிதி நிலைமைகளுக்கு பங்களிப்பு நல்கும் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்த உதவுதல் | 8.3.1.விவசாயம் அல்லாத தொழில்களில் பாலினத்தின் அடிப்படையிலான முறைசாரா வேலைவாய்ப்பின் விகிதம் | **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 692<br>கடன்தொகை - ரூபா 5,448 மில்லியன்<br><br>**“ஜய இசுர” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 1,000<br>கடன் தொகை- ரூபா 21,357.4 மில்லியன் 2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 1.653.22 மில்லியன்<br><br>**“பசுமைக் கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 242<br>கடன் தொகை :ரூபா. 791.5 “மில்லியன் 2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 58.48 மில்லியன்<br><br>**திரி சவிய**<br>கடன்களின் எண்ணிக்கை : 572<br>கடன் தொகை - ரூபா 413.3 மில்லியன் 2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 22.15 மில்லியன் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | | | **"ரிய சக்தி"**<br>கடன்களின் எண்ணிக்கை: 178<br>கடன் தொகை :ரூபா. 613.8 மில்லியன்<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 93.83 மில்லியன் ரூபா<br><br>**"மாத்ய அருண" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 258<br>கடன் தொகை :ரூபா. 76.9 மில்லியன்<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 5.45 மில்லியன்<br><br>**"சங்சாரக பொட்டோ" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 1,198<br>கடன் தொகை 538.46 மில்லியன் ரூபா<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 3.36 மில்லியன்<br><br>**"சிட்டி ரைட்" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 8<br>கடன் தொகை :ரூபா 52.1 மில்லியன்<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 2.08 மில்லியன் |
| **இலக்கு 10** நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல் | 10.1 கொள்கைகளை, குறிப்பாக நிதி, ஊதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புக் கொள்கைகளுக்கு இணங்கி, படிப்படியாக அதிக சமத்துவத்தை அடைதல். | 10.1.1. இறைக் கொள்கையின் மறுபகிர்வு தாக்கம் | உர மானியம் 2022 ஆம் ஆண்டிலும் நடைமுறையில் இருந்த அதேவேளை 2 ஹெக்டேருக்கும் குறைவான நெல் வயல்களை வைத்திருக்கும் நலிவுற்ற சிறு விவசாயிகளுக்கு உதவும் நோக்குடன் அவர்கள் MOP உரம் வாங்குவதற்காக ஒரு ஹெக்டேருக்கு ரூ.10,000 என்றவகையில் ஆகக் கூடியது 2 ஹெக்டேர் வரை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. |
| **இலக்கு 11** நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் உள்ளடக்கமான பாதுகாப்பான உறுதியான மற்றும் நிலைபேறான | 11.1) 2030 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் போதிய, பாதுகாப்பான மற்றும் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவிலான வீடு மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கும் மற்றும் மேம்படுத்தப்பட்ட | 11.1.1 குடிசைகள், மற்றும் சேரிகளில் வாழும் சகரசனத்தொகையின் பிரிவு, போதிய அளவிலில்லாத வீடுகளில் முறை சாராத முறையில் குடியேறி வாழும் நகரச் | **" சொந்துரு பியச" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 14,834<br>கடன் தொகை 2,958.3 மில்லியன் ரூபா<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 152.88 மில்லியன்<br>**"ஹோம் ஸ்வீட் ஹோம்: கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 1,282<br>கடன் தொகை 4,585.2 மில்லியன் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| தாக அமைத்தல். | சேரிகளுக்குமான அணுகலை உறுதிப்படுத்தல் | சனத்தொகையின் அளவு | 2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 301.89 மில்லியன்<br><br>**“சிஹின மாளிகா” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 247<br>கடன் தொகை: Rs. 1,332.5 மில்லியன்<br>2022 ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 72.76 மில்லியன் |
| **இலக்கு 13** காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை எதிர்த்துப் போராட அவசர நடவடிக்கை எடுத்தல் | 13.1. காலநிலை மாற்றக் தொடர்பான நடவடிக்கைகளை தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் திட்டமிடல் ஆகியவற்றில் ஒருங்கிணைத்தல். | 13.1.1. வருடாந்த பச்சை இல்ல வாயுக்களின் மொத்த வெளியேற்றம் | இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைப்பது பசுமை இல்ல வாயுவின் ($CO_2$) வெளியேற்றத்தைக் குறைக்க உதவியது. |

**5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்கல்**

**மேன்நோக்கு**

பேண்தகு அபிவிருத்தியின் பிரதான நோக்கம், ஒரு நாட்டின் இயற்கை வளங்களை தற்கால சந்ததியினரின் முறையான நெறியாள்கையின் மூலம் உகந்த முறையில் பயன்படுத்துவதனூடாக எதிர்கால சந்ததியினருக்கும் அவ் வளங்களை மரபுரிமையாக வழங்குவதாகும். இதனைக் கருத்திற் கொண்டு, 2030 ஆம் ஆண்டளவில் 17 விடயப்பரப்புகளை உள்ளடக்கிய வகையில் அதன் 193 உறுப்பு நாடுகளால் அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படும் 17 பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDG) 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கமைய மனிதவள, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றின் பிரதான காரணிகளை ஒருங்கிணைத்து சுற்றாடல் நிலைத்திருப்பு, சமூக நிலைத்திருப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றினூடாக பொருளாதாரத்தினை பேண்தகு அபிவிருத்தி நோக்கி நகரச் செய்தல் இதன் பிரதான நோக்கமாகும். 2030 ஆம் ஆண்டில் அரச துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பங்களிப்புடன் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்தது.

”வறுமையை அதன் சகல வடிவங்களிலிருந்தும், சகல இடங்களிலிலும் இல்லாதொழித்தல்” எனும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் முதன்மையானதும் மற்றும் முக்கியமானதுமான நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு, உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முதலீட்டை துரிதப்படுத்தல்,

முன்னுரிமைத் துறைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பை வழங்குதல் மற்றும் பாலின சமத்துவத்தில் அதிக அளவில் கவனம் செலுத்துவதனூடாக அபிவிருத்திக்கான உத்திகளை வழிப்படுத்தல் என்பன முக்கியமானவையாகும். பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் மிக முக்கிய மூலோபாயத் துறையொன்றாக நுண், சிறு மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களின் (MSMEs) முக்கியத்துவத்தை அடையாளங்கண்டு, அவற்றிற்கு அரசின் பங்களிப்பை வழங்குவதற்காக அபிவிருத்தி நிதித் திணைக்களமானது பல நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் ஆரம்பித்துள்ளது. அவற்றுள், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் கடன் வரிசைக் கருத்திட்டம் (SMELoC) மற்றும் கொவிட்-19 தொற்று மற்றும் பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்காக செயல்படுத்தப்பட்ட செயற்பாட்டு மூலதனக் கடன் திட்டம் ஆகியவை முக்கிய திட்டங்களாகும்.

**சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சித் துறை அபிவிருத்தி**

2016 ஆம் ஆண்டிலே, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு முதலீட்டுக் கடன்களை வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் ஐ.அ.டொ 175 மில்லியன் மதிப்பிலான கடன் திட்டமொன்று தொடங்கப்பட்டதுடன் அது 2020 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டது. இத் திட்டத்தின் அடுத்த கட்டம் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் அதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஐ.அ.டொ. 165 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. இதில், ஐ.அ.டொ. 100 மில்லியன் தொகை சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் அவசரகால எதிர்வினைக் கூறுக்கும் (ERC), ஐ.அ.டொ. 45 மில்லியன் தொகை சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிக் கடன் திட்டத்தைத் தொடரவும், ஐ.அ.டொ. 20 மில்லியன் தொகை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு புதிய நடுகை, மீள் நடுகை, தானிய உள் நிரப்புதல், நீர்ப்பாசனம், நாற்றங்கால் அபிவிருத்தி, இயந்திரமயமாக்கல் ஆகியவற்றுக்கான ஒரு முன்னோடிக் கடன் திட்டமாக செயல்படுத்துவதற்கும் ஒதுக்கப்பட்டது. இதன்படி, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசையின் கீழ், 2022 ஆம் ஆண்டில் 692 சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு முதலீட்டுக் கடன்களாக சுமார் ரூபா 5,700 மில்லியன் விநியோகிக்கப்பட்டுள்ள அதேவேளை, அதில் 343 பெண் தொழில்முனைவோருக்கு 251 மில்லியன் ரூபாய்கள் முதலீட்டுக் கடன்களுடன் இணைத்து பெண் தொழில்முயற்சியாளர்களின் நிதி முன்முயற்சி மானியமாக வழங்கப்பட்டது.

மேலும், கொவிட்-19 நோய்த்தொற்றுடன் ஏற்பட்ட வணிக வீழ்ச்சி அபாயத்தைக் குறைத்தல், தொழிலாளர்களின் வேலைகளைப் பாதுகாத்தல் மற்றும் சரிந்துள்ள சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாண்மைகளை மீண்டும் மேம்படுத்துதல் போன்ற காரணங்களினால் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் உடனடி நிதித் தேவைகள் அதிகரித்தன. அதன்படி, நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு செயற்பாட்டு மூலதனக் கடனை வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அவசரகால எதிர்வினைக் கூறின் கீழ் 100 மில்லியன் (ரூ. 19,348 மில்லியன்) தொகையினை வழங்கியது. ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையானது வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு, 10 பங்கேற்பு நிதி நிறுவனங்களினூடாக 3,842 தொழில்முனைவோருக்கு 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த நிதி வழங்கப்பட்டது. அவ் மொத்தக் கடன்களில் 53 சதவீதம் பிணையில்லாத கடன்களாகும்.

மேலும், இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தை ஈட்டும் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகிய தேயிலை கைத்தொழில்துறையின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு, சிறு தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பை அதிகரிக்க, ஆசிய அபிவிருத்தி வங்கி புதிய தேயிலை நடுகை, மீள் நடுகை, தானிய உள் நிரப்புதல், நீர்ப்பாசனம், நாற்றங்கால் அபிவிருத்தி, இயந்திரமயமாக்கல் போன்றவற்றை முன்னெடுப்பதற்கான முன்னோடித் திட்டமாக ஐ.அ.டொ 20 மில்லியன் தொகையை வழங்கியது. மேலும், முதலீட்டுக் கடன்களுடன் இணைந்த வகையில், தேயிலை புதிய தேயிலை நடுகை, மீள் நடுகை செய்வதற்காக கடன் வாங்குபவர்களை ஊக்குவிப்பதற்காக கடன் தொகையில் 20% திருப்பிச் செலுத்த தேவையற்ற மானியமாக வழங்கப்படுகின்றது. சிறு தேயிலை உடமையாளர் கடன் வரிசையின் கீழ், 982 சிறு தேயிலை உரிமையாளர்களுக்கு ரூபா 1,515 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. அதில், 660 சிறு தேயிலை உடமையாளர்களுக்கு தேயிலை புதிய நடுகை மற்றும் மீள் நடுகைக்காக ஏறக்குறைய ரூபா 86 மில்லியன் மதிப்பிலான வறுமைக் குறைப்புக்கான ஜப்பானிய நிதி (JFRP) மானியமாக வழங்கப்பட்டது. மேலும், வழங்கப்பட்ட ரூபா 1,515 மில்லியன் கடன்களில் 56 சதவீதம் மீள் நடுகைக்காகவும் 31 சதவீதம் புதிய நடுகைக்காகவும் வழங்கப்பட்டிருந்தது.

**உணவுப் பாதுகாப்பு, போஷாக்கு மற்றும் நிலைத்திருக்கும் விவசாயம்**

உணவுப் பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட போ'ாக்கு மற்றும் நிலைத்திருக்கும் விவசாயத்தை மேம்படுத்துதல் ஆகியவை பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் மற்றொரு முக்கிய நோக்கமாகும். இதற்காக, விவசாயத் துறையில் முதலீட்டை ஊக்குவிப்பதும், உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதும் அவசியமாகும். இது பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவர்கள் நச்சுத்தன்மையற்ற உயர்மட்ட போ'ாக்குள்ள உணவைப் பெறுவதனூடாக உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளை, வறுமையால் பாதிக்கப்படும் நலிவுற்ற மக்களுக்கு ஆண்டு முழுவதும் போதுமான போ'ாக்குள்ள உணவுகள் கிடைப்பதற்கு இது உத்தரவாதம் அளிக்கும். இதன்படி, நெல் கொள்முதல் திட்டம் மற்றும் உர மானியத் திட்டம் ஆகியவற்றை திறம்பட செயற்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி நிதித் திணைக்களம் இந்த நோக்கத்தினை அடைவதற்கு தீவிரமாக பங்களிக்கின்றது.

2021 ஆம் ஆண்டில் 100% சேதன உரக் கொள்கைக்கு அரசாங்கம் நகர்ந்திருந்தாலும், அறுவடையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாக, 2021/22 பெரும் போகத்திலும், 2022 சிறு போகத்திலும் போதுமான அளவு இரசாயன உரக் கிடைப்பதை உறுதி செய்ய முடியவில்லை. இவை நாட்டின் உணவுப் பாதுகாப்பை இடரில் ஆழ்த்தின. எவ்வாறாயினும், 2022 சிறு போகத்தில் இந்திய கடன் வரிசை வசதியின் கீழ் 65,000 மெட்ரிக் தொன் யூரியாவை அரசாங்கத்தினால் இறக்குமதி செய்ய முடிந்தது. மேலும், உலக வங்கியின் நிதியின் கீழ் 105,000 மெட்ரிக் தொன் யூரியா உரமும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் 40,000 மெட்ரிக் தொன் மியூரேட் ஒப் பொட்டாஸ் (MOP) உரமும் 2022 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த உரங்கள் மற்றும் உள்நாட்டு சேதன உர உற்பத்தி என்பவற்றின் மூலம், 2022 ஆம் ஆண்டில் நெற் செய்கைக்கான உரத் தேவையை முகாமை செய்யக்கூடியதாக இருந்தது.

கால்நடைத் தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களால் 2022 ஆம் ஆண்டில் கோழி தீவன உற்பத்தியின் முக்கிய மூலப்பொருளான சோளத்தை தேவையான அளவில் இறக்குமதி செய்ய முடியாமல் போனதன் விளைவாக கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் சந்தையில் கணிசமான அளவு அதிகரித்திருந்தன. கோழி இறைச்சி மற்றும் அவை சார்ந்த பொருட்களின் பொருட்களின் விலை உயர்வால், மக்கள் தொகையில் கணிசமான பகுதியினரால் அவற்றைப்

பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இப் சிக்கலினை கருத்திற் கொண்டு, நுகர்வோர் விவகார அதிகாரசபையானது 2022 ஆம் ஆண்டில் முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை (MRP) வர்த்தமானி அறிவித்தலாக வெளியிட்டதோடு முட்டைகளை இறக்குமதி செய்து அவற்றை விநியோகிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், 2022/23 பெரும் போகத்தில் உள்ளூர் சோள அறுவடையில் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது.

2020 ஆம் ஆண்டு முதல் நிலவும் கொவிட்-19 நோய்த்தொற்று நிலை மற்றும் விவசாயத் துறைக்கு உரம் மற்றும் எரிபொருள் என்பவை உரிய நேரத்தில் கிடைக்காமை காரணமாக 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் நெல் உற்பத்தி ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இந்நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக மாத்திரம் அரச நெல் கொள்வனவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அரச வங்கிகளினால் வழங்கப்பட்ட ரூபா 6,500 மில்லியன் கடனுதவியைப் பயன்படுத்தி 78,355 மெட்ரிக் தொன் நெல் இதனூடாக கொள்வனவு செய்யப்பட்டது. நெல் சந்தைப்படுத்தல் சபையானது லங்கா சதொச மற்றும் ஏனைய பல்பொருள் அங்காடிகளினூடாக அதிகபட்ச சில்லறை விலையில் சுமார் 42,080 மெட்ரிக்தொன் அரிசியை மக்களுக்கு வழங்கியதோடு, சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு காலத்தில் சந்தையில் அரிசிக்கு அதிக விலை நிலவிய போதிலும் இந் நடவடிக்கையின் காராணமாக நுகர்வோருக்கு நிவாரணம் வழங்க முடிந்தது.

2022 ஆம் ஆண்டில், சந்தையில் நிலவிய, அரிசியின் விலைகளின் அதிகரித்துச் செல்லும் போக்கினை, கருத்திற் கொண்டு, சந்தையில் அரிசி நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிப்படுத்தும் ஒரு மூலோபாய அணுகுமுறையாக, 2022 ஆம் ஆண்டிலும் அரிசி இறக்குமதியைத் தொடர அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் திகதி முதல், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரையான கலத்தினுள், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களினூடாக 922,620 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயல்பாட்டில், 2022 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ரூபா 1,350 மில்லியன் மற்றும் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ரூபா 5,135 மில்லியன் பெறுமதியான திறைசேரி உத்தரவாதங்களை மக்கள் வங்கிக்கு வழங்கியதன் மூலம், இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கத்தினால் இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்கு (ஸ்வூஊ) வசதியளிக்கப்பட்டது.

**அத்தியாயம் 06 – மனித வள விபரம்**

**6.1 ஆளணி முகாமைத்துவம்**

| ஆளணி வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | பதவி வெற்றிடம் /(மேலதிகம்)** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 21 | 17 | 04 |
| மூன்றாம் நிலை | 01 | 01 | 00 |
| இரண்டாம் நிலை | 23 | 22 | 01 |
| ஆரம்ப நிலை | 12 | 09 | 03 |

**6.2 **ஆளணிப் பற்றாக்குறையான அல்லது மேலதிகம் மனித வளங்கள் நிறுவன செலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக.**

வெற்றிடங்களுக்குரிய கடமைகள் ஏனைய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன.

**6.3 மனித வள அபிவிருத்தி**

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றப் பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு ) | வெளியீடு/ பெற்றுக் கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| இலங்கையில் பேண்தகு அபிவிருத்தியை வலுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் | 2 | 04 நாள் | - | - | உள்நாடு | இலங்கை மதிப்பீட்டுச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளுக்கு அபிவிருத்தி தலையீடுகளில் ஈடுபடுவதற்கான மதிப்பீட்டுத் துறையின் திறனை மேம்படுத்துவதற்காக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மதிப்பீடுகளை நிர்வகித்தல் குறித்த பயிற்சியாகும். பங்குபற்றிய அதிகாரிகளால் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | அதிகளவிலான மதிப்பீட்டு அறிவைப் பெற முடிந்தது. |
| அலுவலக முகாமைத்துவம் மற்றும் நெறிமுறைகள் | 01 | 02 நாள் | 7,500 | | உள்நாடு | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நெறிமுறைகள் பற்றிய பரந்த அறிவினைப் பெறக்கூடியதாக இருந்தது. |
| அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிற்றூழியர்களின் திறன் அபிவிருத்தி | 01 | 02 நாள் | 10,000 | | உள்நாடு | திறன் மேம்பாடு தொடர்பான அறிவினைப் பெறக்கூடியதாக இருந்தது. |
| விடுமுறை விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரியின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் | 01 | 01 நாள் | 5,000 | உள்நாடு | | தாபன விதிக் கோவையின் 12வது அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ள விடுமுறை பற்றிய அறிவு கிடைக்கப்பெற்றது. |
| கணக்கு எழுதுவினைஞரின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் | 01 | 01 நாள் | 5,000 | உள்நாடு | | கணக்கியல் மற்றும் புத்தக பராமரிப்பின் நடைமுறைப் பயன்பாடு பற்றிய சிறந்த அறிவினைப் பெறக்கூடியதாக இருந்தது. |
| தாபனக் கோவை மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயன்முறை விதிகள் | 01 | 02 நாள் | 7,500 | உள்நாடு | | அலுவலகப் பணிகளில் தாபனக் கோவை மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயன்முறை விதிகளின் பயன்பாடு பற்றிய அறிவினைப் பெறக் கூடியதாக இருந்தது. |
| உதவி ஊழியர்களுக்கான கொள்முதல் செயல்முறை | 01 | 02 நாள் | 10,000 | உள்நாடு | | கொள்முதல் செயன்முறகள் பற்றிய அறிவினைப் பெறக்கூடியதாக இருந்தது |
| ஓட்டுநர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கான நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கங்கள் | 01 | 02 நாள் | 8,500 | உள்நாடு | | நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கங்கள் குறித்த பயிற்சி பெறக்கூடியதாக இருந்தது. |

* நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக விளக்குக

**அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை**

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதைப்பற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது? |
|---|---|---|---|---|
| **1.** | **பின்வரும் நிதி அறிக்கைகள் /கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள் ) | பொருத்தமற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.6 | ஏனைய | இணக்கமானது | | |
| **2.** | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 207/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுதிறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **3.** | **நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லதுஅதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| **4.** | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| **5.** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| **6.** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134 (2) DMA / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | இணக்கமானது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.4 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| **7.** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **8.** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/ 2017 ,சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கையின் இல 05/2016 பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம் பெற்றது | இணக்கமானது | | |
| **9.** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுத்ல வேண்டும். | பொருத்தமற்றது | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் .12.2 9 பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016 / 30 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **10.** | **வங்கிக் கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல். | இணக்கமானது | | |
| **11.** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் வரையறைகளை மீறாத படி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி.94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| **12.** | **அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல். | இணக்கமானது | | |
| 12.2. | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **13.** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14.** | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைதிறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல்,அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும். | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுத்தல் வேண்டும். | இணக்கமானது | | |
| **15.** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின் படி சேர்க்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| **16.** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல். | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/ 2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **17.** | **பொது மக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் /குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படிஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **18.** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல: 05/ 2008 மற்றும் 05/ 2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் /பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்த வரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |
| **19.** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02 /2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| **20.** | **கணக்காய்வு பதிவுகளுக்கான பொறுப்புகள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்தல். | இணக்கமானது | | |